**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 –**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய செயற்றிட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 இன் குறிக்கோள்களாக உள்ளது. செயற்றிட்ட நடவடிக்கைகள் செயற்றிட்ட அபிவிருத்தி உதவி ஆலோசனை ஒப்பந்தம், செயற்றிட்டம்- 01 இற்கான மேலதிக நிதி மற்றும் செயற்றிட்டம்- 02 இற்கான மேலதிக நிதி என்ற பெயருடைய 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐபீ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மா நகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 இன் நடவடிக்கைகள் மீது செய்யப்பட்ட அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம் 03 ஆனது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்றிட்டம் 03 இன் கால எல்லை 2022 ஒக்தோம்பர் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம்- செயற்றிட்டம்- 03 இன் நிதி

நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான

வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| இல | கணக்கீட்டுக் குறைபாடு | தொகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | -------------------------------- | --------<br>ரூபா<br>(மில்லியன்) | ---------------------------------- | ------------------------------ |
| (அ) | தேசிய நீர் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் கொழும்பு மா நகர சபையால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 249.67 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.42 மில்லியன் கூட்டுத்தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் வட்டிகள் கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவை அமுல்படுத்தப்பட்ட இரு அமுலாக்கல் முகவர்களிடையேயுமிருந்து பிரிக்கப்பட்டு பகிரப்படாததுடன் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிதிக் கூற்றுகளுக்கு கொண்டு வரப்படவுமில்லை. இதன் விளைவாக, கடன் வருமானம் அதே பெறுமதியினால் குறைந்திருந்தது. | 249.67 | கொழும்பு மா நகர சபை மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து 2021 ஆம் ஆண்டிலிருந்து கணக்கு புத்தகங்களின் வட்டி மற்றும் கடப்பாடு கட்டணங்கள் மற்றும் கணக்கு பிரிப்பதற்கான முறையான முறைமையொன்றினை உருவாக்கும். | மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்திய கடன் தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு கடனளிக்கும் முகவரால் நேரடியாக அறவிடப்படுவதற்கு உரிய கிரயங்கள், செயற்திட்டங்கள் இடையில் முறையாக பிரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 713,409 பெறுமதியான பரிவர்த்தனை வருமானம் நிதி நிலைமை கூற்றில் நிதி மூலத்தின் கீழ் வேறுபடுத்திக் காட்டப்படுவதற்கு பதிலாக செய்யப்பட்டு வருகின்ற வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 0.71 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரையை நாங்கள் கடைப்பிடிப்பதுடன் அதன் பிரகாரம் கணக்குகளை சரி செய்வோம். | நிதி நிலைமைக் கூற்றில் பரிவர்த்தனை வருமானமானது நிதி மூலத்தின் கீழ் வேறாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 மே மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை நீர் வழங்கல் மற்றும் வடிகலமைப்பு சபையினால் பொது திறைச்சேரிக்கு செலுத்தப்பட்ட ரூபா 1.21 மில்லியனான துணைக் கடன் வட்டி நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 1.21 | செயற்திட்ட கணக்கு நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் இப் பதிவு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் லெஜரில் நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. பதிவானது பின்னர் செயற்திட்ட | செயற்திட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதன் முன்னர் தொடர்புடைய செலவினங்கள் கருத்திற் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

புத்தகங்களிலும் கணக்கிடப்பட்டுள்ளது.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.2 இன் பிரகாரம் வினைத்திறனான செயற்திட்ட முகமைத்துவத்தினை உறுதி செய்வதற்காக செயற்திட்ட பணிப்பாளர் எப்போதும் முழு நேர அடிப்படையில் இணைக்கப்படல் வேண்டும். | செயற்திட்டம் ஒன்று, இரண்டு மற்றும் நிகழ்ச்சிதிட்டம் - செயற்திட்டம் மூன்று செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் அமுலாக்கப்பட்டிருப்பினும், செயற்திட்ட பணிப்பாளர் மேலதிக பொது மேலாளராக பதவி உயர்த்தப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 2 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் பிரதான அலுவலகத்தில் நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவின் கடமை நிறைவேற்றலுக்காக இணைக்கப்பட்டிருந்தார். ஆகவே, செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை விரைவுப்படுத்துவதற்காக செயற்திட்ட பணிப்பாளரின் முழு நேர சேவை அடிப்படையில் இணைப்பதற்கு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் இல்லை | முழு நேர சேவை அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டம் 01 இற்கான நிதி இடைவெளியினை நிரப்புவதற்கான மேலதிக நிதியளிப்பு, செயற்திட்டம் 02 மற்றும் செயற்திட்ட அபிவிருத்தி உதவி என செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 03 கூறுகளைக் கொண்டதாகும். மேலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 4,940 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொ 38 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 4,550 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொ 35 மில்லியன்

செயற்திட்டம் 01 இற்கான நிதி இடைவெளியினை நிரப்புவதற்கான மேலதிக நிதியளிப்பிற்காகவும் செயற்திட்டம் 02 இற்காகவும் மிகுதி தொகையான ரூபா 390 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொ 3 மில்லியன் செயற்திட்ட அபிவிருத்தி உதவி வேளைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்ப திகதியிலிருந்து 4 ஆண்டுகள் மற்றும் 4 மாதங்கள் சென்றிருப்பினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட அபிவிருத்தி உதவி செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 03 மில்லியனில் 16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 80.67 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொ 0.48 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டம் 01 இற்கான நிதியளிப்பு இடைவெளியை நிரப்புவதற்காகவும் செயற்திட்டம் 02 இற்காகவும் 35 மில்லியனில் எந்தவொரு நிதியும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, 2020 திசெம்பர் 31 இற்கு செயற்திட்டத்தின் குறைவான செயன் முன்னேற்றத்தின் காரணத்தினால் செயற்திட்டத்தின் மொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்ட அபிவிருத்தி உதவி வேளைகளின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு காணப்படுகின்றது.

| இல | கூறு/ உப கூறு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னெற்றம் | | | | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தனிப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள ஒப்பந்தங்கள் | பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தங்கள் | | | |
| (அ) | **செயற்திட்ட அபிவிருத்தி உதவி**<br>(i) ஆலோசனை ஒப்பந்தம் | | | | | செயற்திட்ட பூத்தியாக்கலில் தாமதம் | சாத்தியக்கூறு ஆய்வு, விபரமான திட்டம் மற்றும் ஏல ஆவணங்கள் ஊடாக சாத்தியமான திட்டத்தின் தயார்நிலைக்காக செயற்திட்ட அபிவிருத்தி உதவி (பீ.டீ.ஏ) கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், கடன் தொகையானது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (பீ&டீ) பிரிவு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய உதவி மையங்கள் (ஆர்எஸ்சீ) ஆகியவற்றின் உள்ளவாரான தேவைகளுக்கேற்ப பயன்படுத்தப்பட்டது. | கடன் இறுதி திகதிக்கு முன்னர் ஒப்பந்தத்தின் செயற்திட்ட அபிவிருத்தி உதவி பணிகளை வழங்கவும் நிறைவு செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii)பொருட்கள் மற்றும் வேலைகள் ஒப்பந்தங்கள் | 10 | 10 | 02 | 08 | | | |
| | (iii) ஆவண தயரிப்பின் கீழ் | 20 | 20 | 04 | 16 | | | |
| | | 18 | - | - | - | | | |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பு படையினரிடம் முன் அங்கீகாரமின்றி முன்மொழியப்பட்ட கீழ் பாலியாறு நீர் தேக்கத்தின் (ஆர்எஸ்சீ(என்)டீஜீஎம்/எடீபீ/பாலி/சர்/2020/2) நிலப்பரப்பு மதிப்பாய்விற்கான ஒப்பந்தம் 2020 செப்தெம்பர் 02 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. பின்னர் இலங்கை இராணுவத்தின் அறிவிப்பின் அடிப்படையில் பாலியாறு பிரதேசத்தின் கண்ணிவெடிகள் அகற்றப்படாமையின் காரணத்தினால் ஒப்பந்தக்காரர் மாதிப்பாய்வு நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளார். இதன் விளைவாக இப் பிரதேசத்தின் கண்ணிவெடிகள் அகற்றப்படும் வரையில் மதிப்பாய்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் எதிர்பார்க்கப்படாத நிலையொன்று ஏற்பட்டமை. | நீர் வழங்கல் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | செலுத்துகை மற்றும் பகிர்மான வலைப்பின்னலுக்கான நிலப்பரப்பு மதிப்பாய்வு நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தம் தெரிவு செய்தல் (ஹம்பேகமுவ/சர்வே/2019/204) ஏலத் தேவைகள் பற்றிய சான்றுகளான நில அளவை திணைத்தளத்தின் பதிவு, 3 மில்லியனின் குறைந்தப்பட்ச நிதி திறன், கடந்த 3 ஆண்டுகளில் ஒத்த வேளைகள் தொடர்பான குறைந்தப்பட்ச அனுபவம் மற்றும் செய்யப்பட்டு வருகின்ற ஒத்த பணிகளின் விபரங்கள் போன்றன ஏலக் கோவைகளில் காணப்படவில்லை. பின்பதாக ஒப்பந்தக்காரர் தனியார் காரணமென அறிவித்து ஒப்பந்தத்தினை ஏற்க மறுத்துள்ளார். பின்னர் இரண்டாவது குறைந்த எலதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரை சரியாக தெரிவு செய்யாததன் காரணத்தினால் புதிய ஒப்பந்தக்காரரை தெரிவு செய்ய நேர்ந்தமையினால் ஒரு வருடம் மற்றும் நான்கு மாதங்கள் தாமதமாகியிருந்தன. | மிகக் குறைந்த ஏலதாரர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மதிப்பாய்வு செயற்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்தார். எனினும், ஏலராதரின் தனிப்பட்ட காரணத்தினால் ஒப்பந்தத்தினை ஏற்பதற்கு மறுத்தார். | ஏலதாரர்களை மதிப்பிடும் போது ஏலத் தேவைகள் கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும். |
| (இ) | நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இற்காக தனியாக பணிநிலையினர் ஏற்பாடு முகாமைத்துவ சேவைகள் | புதிய செயற்திட்டங்களை அடையாளம் காண்பதற்கு பீடிஏ | செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் அடையப்படுவதற்காக கடமைகளை |

| | | |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்ட அபிவிருத்தி உதவி மற்றும் பிற செயற்திட்டங்களின் கீழ் தனிப்பட்ட ஒப்பந்தங்களை வழங்கல் செயற்திட்டம் 01 மற்றும் 02 போன்ற ஒத்த ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதில் பெயர் குறிக்கப்பட்ட பணிநிலையினர் முழு நேரம் விடுதலை செய்யப்படாததுடன் செயற்திட்ட பணிகளின் கடமைகளும் பணிக்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக, நாளதுவரையாக்கப்பட்ட பெறுகைத் திட்டம், முன்னேற்ற தகவல்களான, உரிய திகதியில் ஆலோசனை அறிக்கைகள் மற்றும் வேலைகளை சமர்ப்பித்தல், அத்தகைய அறிக்கைகளின் மதிப்பாய்வு, ஒப்பந்தங்களின் தாமதம், தாமத ஒப்பந்தங்களின் பின்னூட்டல் நடவடிக்கைகள், ஆயத்த பணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் போன்றன குறித்த நேரத்திற்கு செயற்திட்டத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை மற்றும் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பிராந்திய உதவி மையங்களுக்கிடையில் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு காணப்படாமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், செயற்திட்டத்தின் அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டதா என்பது கணக்காய்விற்கு கேள்விகுறியதாகவுள்ளது. | கடன் தொகை வழங்கப்பட்டது. எனவே, ஆரம்ப கட்டத்தில் தேவையான பணிநிலையினரின் எண்ணிக்கை எங்களால் வரையறுக்க முடியாது. பெறுகை நடவடிக்கைகள் செயற்திட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றதுடன் அமுலாக்கல் பகுதி தொடர்புடைய பிராந்திய உதவி மையங்கள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு இனால் மேற்கொள்ளப்படுகின்றன. இது எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | குறித்து முழு நேர அடிப்படையில் தனி பணிநிலையினர் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 சுற்றாடல் ரீதியான விடயங்கள்**

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிற்காக உள்ளூர் நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிராதிருப்பினும், மீளாய்வாண்டினுள் செயற்திட்டமானது ரூபா 1.9 மில்லியன் அடைந்திருந்தது. | பதில் இல்லை | முகாமைத்துவ கருவியாக வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத வளங்கள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொண்டு செல்லப்படுவதற்கு ரூபா 4,940 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொ 38 மில்லியன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒத்த செயற்திட்டங்களான 01 மற்றும் 02 இன் மோசமான செயற்பாட்டினால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 4 ஆண்டுகள் மற்றும் 4 மாதங்கள் கடந்திருப்பினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாராறு 1.26 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்துகின்ற ரூபா 80.67 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொ 0.48 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால், செயற்திட்டத்தின் கால எல்லை 2022 ஒக்தோம்பர் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக கடன் ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் பகிர்தல் மீதியின் கீழ் செயற்திட்டத்தின் கடப்பாடு கட்டணம் அதிகரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததன் காரணத்தினால் 1 மற்றும் 2 இன் கணிசமான அளவு சேமிப்பினை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இதன் விளைவாக, டிரான்ச் 01 கடன் தொகை 2020 இற்கு வழங்க முடியவில்லை. அதன் பின்னர் சேமிப்பின் பயன்படுத்துவதற்கும் கடன் தொகை மேலும் நீடிக்காது வழங்குவதற்கும் 2019 முதல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அர்பணிப்பு சதவீதம் 100% வரை அதிகரிக்கப்பட்டது. நீங்கள் அறிந்த விதத்தில், சீஎம்சீ கடன் தேவையின் காரணத்தினால் 2016 ஆகஸ்ட் மாதத்தில் செயற்திட்டம் 01 மற்றும் 02 இற்காக மேலதிக நிதியளிப்பாக டிரான்ச் 03 கடன் தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உண்மையான தேவை 2019 இல் காணப்பட்டது. | செயற்திட்டத்தின் உள்ளவாரான நிகழ்கால தேவைப்பாடு மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் மேலதிக நிதி விண்ணப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் கால எவ்வை 2022 ஒக்தோம்பர் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பினும், திருத்தப்பட்ட வழங்கல் திட்டம் மற்றும் மேலதிக நிதியளிப்பு நோக்கத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் | கடன் நீடிப்பு காலத்திற்குள் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கை திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உங்கள் குறிப்பிற்காக பின்னிணைப்புகளாக | செயற்திட்டமானது, நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 மற்றும் 02 இற்கான ஒட்டுமொத்த செயல்நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | விவைாக, செயற்திட்டத்தின் கால எல்லைக்குள்ளான நிதி பயன்பாடு சந்தேகத்திற்குரியதாக காணப்பட்டது. | இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 01 மற்றும் 02) | திட்டத்தினை சமர்ப்பித்துள்ளது மற்றும் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இற்கான விபரமான செயல் நடவடிக்கை திட்டம் சமர்ப்பிக்கப்பட்ல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்காக திறைச்சேரியிடமிருந்து வெளிநாட்டு நிதி உதவியாக ரூபா 250 மில்லியன் கோரப்பட்டிருப்பினும், உள்வாரான பெறப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 227.79 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டினுள் எந்தவொரு நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டத்தின் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைவாக வெளிநாட்டு நிதியின் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | நடைமுறையில் காணப்படுகின்ற கொவிட் 19 நிலைமையின் காரணத்தினால் டெண்டர் மற்றும் கட்டுமானம் வழங்கப்படுவதில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவில் தாமதம் காணப்பட்டது. | ஒதுக்கப்பட்ட வளங்களினை திட்டமிடப்பட்ட கலத்திற்குள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | பதில் இல்லை | உள்ளக கணக்காய்வொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |